25.03.2025 எம்.சி.ஓ.பி. எண். 33/2022 ம.சா.1 வகிதாமணி

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன குணசேகரன் என்னுடைய கணவர். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது என் கணவருடன் வண்டியில் சென்ற சேகர். வாகன பதிவு எண். டி.என். 73 சி 6645 என்கிற வாகனம் சேகருக்கு சொந்தமானது. மேற்சொன்ன வாகனத்தை ஓட்டி சென்றது முருகன். மேற்சொன்ன வாகனம் பொருட்களை ஏற்றி செல்லக்கூடிய வாகனமாகும். மேற்சொன்ன வாகனத்தை முருகன் ஓட்டிக்கொண்டும் வாகனத்தின் உரிமையாளர் சேகர் மற்றும் என் கணவர் குணசேகரனும் உட்கார்ந்துக்கொண்டு சென்றுள்ளார்கள். வாகன பதிவு எண். டி.என். 83 டி 1774 என்கிற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த தினேஷ் வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் முருகன் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் வந்து கவனக்குறைவாக விபத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. சேகர் காவல் நிலையத்தில் அளித்துள்ள புகாரில் இருசக்கர வாகனத்தில் வந்தவர்களால் தான் விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார் என்றால் இல்லை. இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த தினேஷ் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றால் தெரியவில்லை. இருசக்கர வாகன ஓட்டுநர் இறந்துவிட்டதால் காவல் துறையினர் குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது என இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியவில்லை. இருசக்கர வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமமும் இல்லை என்றும் வாகனம் காப்பீடும் செய்யப்படவில்லை என்று சொன்னால் சாட்சி பதிலளிக்கவில்லை. இருசக்கர வாகன உரிமையாளரிடம் இழப்பீடு பெறமுடியாது என்பதற்காக முதல் தகவல் அறிக்கை சங்கதிகளை மறைத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் தோஸ்த் வண்டி ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டியதாக இல்லை. வாகன பதிவு எண். டி.என். 73 சி 6645 என்கிற வாகனத்தில் ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் இருவர் மட்டும் தான் செல்லமுடியும் என்றும் 3 பேர் சென்று

விபத்து ஏற்பட்டுள்ளதால் காப்பீடு விதிமீறல் நடந்துள்ளது என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைபட்டவர் இல்லை என்றால் சரியல்ல. வாகன பதிவு எண். டி.என். 73 சி 6645 என்கிற வாகனத்தில் ஓட்டுநரும், உரிமையாளரும் சென்றுள்ளதால் என் கணவர் அனுமதிக்கப்படாத பயணியாக தான் சென்றுள்ளார் என்று சொன்னால் முருகன் தான் அழைத்து சென்றார், தக்காளி ஏற்றிக்கொண்டு வந்தார். விபத்து நடந்தபோது காலி வண்டியாக தான் சென்றது என்றால் போகும்போது தான் விபத்து ஏற்பட்டது. பதிவுச்சான்றின் படி மேற்சொன்ன வாகனத்தில் 2 பேர் தான் செல்லமுடியும் என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகன உரிமையாளரிடம் இழப்பீடு பெறமுடியாது என்பதால் உண்மை சங்கதிகளை மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.